இறையரசு மலர

REGNUM CHRISTI

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

Vol. 18 MAY - 2022 No. 05

**Dear Fathers, Brothers and Sisters**

We are in the month of May that is dedicated to May devotion to our Lady. In this whole month let us rededicate ourselves to our Mother Mary, gather in the parish church with our families, pray the Rosary with much of devotion and love. Let our Mother intercede for us and bring us all choicest blessings to our families, our parishes and our diocese.

We are also in the Paschal Season. Let us witness the same Risen Lord in our lives by keeping his commandment of preaching the Good News to all. Let the peace and joy of our Risen Lord envelop us and enkindle us to be the instrument of the same peace and joy to the world.

On 30 April we had the concluding day of preparation for Synod 2021-2023 in our diocese. There were more than 128 people representing different groups and commissions of our diocese (council members, vicar foranes, priests, religious, teachers, catechists, BCC, youth, 5 members from each parish and commission secretaries) It was a whole day program that ended with very grand success. The detailed report is given by the diocesan coordinator Rev. Fr. L. Ramesh. At this juncture I would like to appreciate and congratulate Rev. Fr. L. Ramesh the coordinator for his wonderful effort and hard

work right from its inauguration till the conclusion. My sincere thanks go to all the team members: Fr. Sundar SDB., Fr. Panneer Selvam, Fr. Magalam David, Fr. Jagadish, Fr. Thangaraj, and Mr. Belevendiram for their cooperation and collaboration with the coordinator. My special thanks to Rev. Fr. D. Alphonse, Kottar for his thought provoking message on that day. Of course I would like to thank and appreciate all the council members, VFs, parish priests, religious, and all the participants for their active participation, interventions and involvements. Based on the comprehensive consolidation of all the responses the 10 pages report will be prepared to be sent to CCBI centre.

On 15 May the canonization of Martyr Devasahayam the first lay Saint from India is going to take place in Rome. Let us thank the Lord for the gift of this Saint to our Church. Some of our diocesan priests have gone to Rome to take part in this historical event of canonization. We are asked by the TNBC/TNLBC president Most Rev. Dr. George Antonysamy to say a thanksgiving mass on this day. Kindly follow the circular on Saint Devesahayam:

“சமத்துவ நல்லறம் காட்டும் நம் இல்லறப் புனிதர்”

மறைசாட்சி தேவசகாயம் புனிதர் பட்டம்
தேசிய அளிவலான நன்றி அறிவிப்பு கொண்டாட்டம்
ஜுன் 05. தூய ஆவியார் பெருவிழா

“நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்” (1 தெச 4:3) என்று கூறி தூய்மை நிலைக்கு அனைவரையும் அழைக்கும் “ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்து உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக” (எபே 1:2)

இவ்வாண்டின் மே திங்கள் 15ஆம் நாள் இந்தியத் திரு அவைக்கு, அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டுத் திரு அவைக்குத் தனிச் சிறப்புமிக்க நாள். தமிழகத் திரு அவையின் தவப்புதல்வன் மறைசாட்சி தேவசகாயம் அவர்களின் புனிதர் பட்ட நிகழ்வு அன்று நடக்கவிருக்கின்றது. தமிழக மக்கள் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரந்திருக்கும் தமிழ்கூறும்

நல்லுலகம் அனைத்திற்கும் இது ஒரு அக்களிப்பின் நாள். மறைசாட்சி தேவசகாயம் இந்திய மண்ணிலே தம் இரத்தத்தைச் சிந்தி மறைசாட்சி மகுடம் பூண்ட முதல் இந்தியர் அவர். இந்தியத் திரு அவையின் முதல் பொதுநிலைப் புனிதர்; முதல் இல்லறப் புனிதர். தமிழகத் திரு அவையின் முதல் புனிதர். இப்படி பற்பல முதன்மைகளைக் கொண்ட நம் புனிதர் தேவசகாயம் என்பதனை உணர்ந்து தூய்மை நிலையின் ஊற்றாம் கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

நம்பிக்கை நிறைந்த நல்வாழ்வு :

நம் புனிதர் தேவசகாயம் தமிழ்நாட்டின், குமரிமாவட்டத்தின் நட்டாலம் என்னும் அழகுறு கிராமத்தில் 1712-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் பிறந்தார். தம் முதல் குழந்தை இவருக்கு பெற்றோர்கள் இட்ட பெயர் ''நீலம்'' என்பதாகும். இப்பெயர் ''நீலகண்டன்'' என்றும் சொல்லப்பட்டது.

கல்வி, பயிற்சி :

கடவுள் நம்பிக்கை நிறைந்த குடும்பம் அது. தேவையான சொத்து சுகங்களை கொண்டு வாழ்ந்திருந்தவர்கள். எனவே சிறுவன் நீலகண்டனுக்கு நற்கல்வி கிடைத்தது. தமிழ், மலையாளம் மற்றும் சமஸ்கிருதம் மொழிகளைக் கற்றார். இளமையிலேயே நல்ல போர்ப் பயிற்சியையும், குறிப்பாக, தற்காப்புக் கலைகளாகிய சிலம்பம், அடிமுறை மற்றும் வர்மக் கலையினையும் ஆசான்களிடமிருந்து கற்றுக் கொண்டார்.

ஏற்ற பணிகள் :

நீலகண்டன் முதலில் சிறிதுகாலம் படை வீரனாகச் சேர்ந்தார். அப்பணியில் சிறந்து விளங்கினார். இளைஞனாக இருந்தபோதே அரசனின் அரசவையிலும் பணியமர்த்தப்பட்டார். நம்பத்தக்க் கருவூலப் பணியாளனாகத் திகழ்ந்தார்.

திருமணம் : நீலகண்டனின் 27-ஆம் வயதில் மேக்கோடு என்னும் ஊரைச் சேர்ந்த பரமேஸ்வரன், அனந்தேஸ்வரி ஆகியோரின் மகள் பார்கவி என்பவரைப் பெற்றோர், பெரியோர்களின் ஏற்பாட்டின்படி முறைப்படி திருமணம் முடித்து இல்லறம் மேற்கொண்டார். இல்லற வாழ்வில் மகிழ்வுடன் ஈடுபட்டிருந்தார். தம் நிலத்தையும், ஆடுமாடுகளையும்

பார்த்துவந்த அந்தக் காலத்தில் மிகுந்த தாழ்ந்தவர்களாகவும் ஏறக்குறைய அடிமைகளாகவும் நடத்தப்பட்ட மக்களிடம் அவர் நெருங்கிப் பழகினார்.

குளச்சல் போர், டிலனாய் வருகை :

இக்கால கட்டத்தில்தான், 1741 ஆம் ஆண்டு துறைமுக நகராம் குளச்ல் மார்த்தாண்ட வர்மாவின் திருவிதாங்கூர் படைகளுக்கும் ஆக்கிரமிக்க வந்த டச்சுப் படைகளுக்கும் இடையே போர் ஏற்பட்டது. அப்போரில் டச்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அச்சூழலில் டச்சுப் படையிலிருந்து 24 பேர் மார்த்தாண்ட வர்மாவிடம் சரணடைந்து போர்க் கைதிகள் ஆயினர். திருவிதாங்கூர் படையில் சேர்ந்து மன்னனுக்கு விசுவாசமாக இருந்து பணியாற்ற வாக்குறுதி அளித்ததால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுள் ஒருவர் பெனதிக்து டிலனாய் என்னும் கத்தோலிக்கர். திருவிதாங்கூர் படையை நவீனப்படுத்தவும், மண்கோட்டைகளைக் கற்கோட்டைகளாக்கவும் டிலனாய்க்குப் பொறுப்பு தரப்பட்டது. அவ்வாறு அரண்மனையைச் சுற்றி உதயகிரிகோட்டை கட்டும் அலுவல் நடந்தது. அந்தப் பணிகளின்போது, தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பொறுப்பு கருவூல அலுவலரான நீலகண்டரிடம் இருந்தது.

துன்பம் எனும் சோதனை :

நீலகண்டன் – பார்கவி அம்மாள் குடும்பம் சில நட்டங்களை அனுபவிக்க நேர்ந்தது. எவ்வாறெனில், வானம் பொய்த்துப்போக, பயிர்கள் கரிந்து போயின. நல்ல மாடுகள் சில நோயுற்று மடிந்து போயின. இதனால் கவலை கொண்டனர் தம்பதியர். மக்கள் செல்வமும் இன்னும் பிறக்காத நிலையில் வேளாண் தொழில் இழப்பும், கன்றுகாலிகளின் இறப்பும் இக்குடும்பத்தை வருத்தத் தொடங்கியது. இதனால் நீலகண்டன் மிகவும் கவலையோடு காணப்பட்டார். அவரோடு உரையாடி ஆற்றுப்படுத்தி, விவிலிய மாந்தர் யோபுவின் வரலாற்றை எடுத்துக் கூறினார் டிலனாய். டீலனாயின் நற்செய்தி விளக்கத்தினால் தெளிவு பெற்றார் நீலகண்டன்.; நீலகண்டன் தான் திருமுழுக்குப் பெற விரும்புவதாக தம் நண்பர் டிலனாயிடம் சொன்னார். நீலகண்டனின் உறுதியை அறிந்துகொண்ட டிலனாய், அவரை வடக்கன்குளத்தில் இருந்த நேமம் மிஷன் தலைவர் சேசுசபை அருள்பணி யொவான்னி பத்திஸ்தா புத்தாரியிடம் அனுப்பினார்.

தந்தை புத்தாரி 9 மாதங்களாக நீலகண்டனுக்கு மறைக்கல்வி கற்றுத் தந்தார். மே 14, 1745-இல் திருமுழுக்குப் பெற்று தேவசகாயம் ("லாசரஸ்" என்னும் பெயரின் தமிழாக்கம்) என்று மாறினார். அவருடைய ஞானத்தந்தை ஞானப்பிரகாசம் என்பவர். தொடர்ந்து ஒப்புரவு பெற்று முதல் திருவிருந்தும் அருந்தினார்.

புதுக் கிறித்தவர் தேவசகாயத்தின் வாழ்க்கை :

திருமுழுக்கு தேவசகாயத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. தன் இதயத்திலும் வாழ்விலும் பெரும் மகிழ்ச்சியை அனுபவித்தார் தேவசகாயம். தான் பணியாற்றிய மன்னனின் அரண்மனையில் தம்மை எல்லாரும் "தேவசகாயம்" என்று அழைக்கச் சொன்னார். கிறித்தவ வழிபாடுகளிலும் அருளடையாளங்களிலும் பெரும் ஈடுபாட்டுடன் பங்கேற்றார். ஒரே கடவுளின் பிள்ளைகள்தாம் எல்லாரும் என்று உணர்ந்தார். சாதி வேற்றுமை கொடும் பாவம் என்றும், தீண்டாமை அதனினும் கொடியது என்றும் உணர்ந்து, எல்லா மக்களிடமும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடமும் நல்லுறவு பாராட்டினார். சாதி அடையாளங்களையும், மரபுகளையும், சாதிச் சட்டங்களையும் மீறினார்.
"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று தான் சந்தித்த அனைவரிடமும் தமது புதிய நம்பிக்கையை எடுத்துரைத்தார் தேவசகாயம். அவரது சாட்சியத்தால் அவரது மனைவி பார்கவி அம்மாள் திருமுழுக்கு பெற்று "ஞானப்பூ" என்னும் பெயர் பெற்றார். ("தெரசா" என்னும் பெயரின் தமிழாக்கம்). அவ்வண்ணமே படைவீரர் சிலரும் மனம் மாறினர்.

குற்றச்சாட்டும் கைதும் :

இவை அனைத்தும் தவறாகத் திரித்துக் கூறப்பட்டு மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. புதிய நம்பிக்கையை மேற்கொண்டு, புதிய வழிபாடுகளை அவர் பின்பற்றியது ''தெய்வ துரோகம்'' என்று சொல்லப்பட்டது. சமுதாய சமத்துவத்தை அவர் கைக்கொண்டு வாழ்ந்ததும், சாதி மறுப்புச் செய்ததும் "குலத் துரோகம்" என்று தீர்ப்பிடப்பட்டது.

புதிய நம்பிக்கையை எல்லாம் விட்டுவிட மன்னவன் கூற, அதை ஏற்காமல் தம் கிறித்தவ நம்பிக்கையில் உறுதியாக இருந்ததை "ராஜதுரோகம்" என்றார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடன் அவர் உறவுகொண்டு வாழ்ந்ததைத் தீட்டு என்று சொல்ɔ அத்தீட்டுப்பட்ட நிலையில் அவர் அரண்மனைக்குள்

வரக்கூடாது என்றார்கள். பல்வேறு தவறான குற்றச்சாட்டுகளுக்காக 28.2.1749-இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

வன்கொடுமைகளும் மறைசாட்சியமும்

கைது செய்யப்பட்ட தேவசகாயம் அனைத்துப் பொறுப்புக்களிலுமிருந்து நீக்கப்பட்டார். அவரது சொத்துக்களின் உரிமையும் அவருக்கு மறுக்கப்பட்டது.

ஆளுநர் முன் நடந்த விசாரணையின்போது, தமது புதிய நம்பிக்கையை மறுக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களோடு பழங்குவதைத் தவிர்க்கவும் மறுத்தார். உடனே அவரைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். அதோடு திருவிதாங்கூர் அரசில் உள்ள உள்நாட்டு லத்தீன்சபைக் கிறித்தவர்கள்மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

இரண்டுமுறை சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டாலும் மூன்றாம் முறைதான் அவர் கொல்லப்பட்டார். அதற்கிடையில்

- திருவிதாங்கூர் அரசின் எட்டு தாலூக்காக்களுக்கும் இழுத்துச் செல்லப்பட்டு விசாரணையும் பல்வேறுவிதமான வன்கொடுமை-களுக்கும் உள்ளானார்.
- கைகள் கட்டப்பட்ட நிலையில், எருக்கம் மாலை அணியப்பட்டு, எருமைமீது அமர்த்தப்பட்டு பல ஊர்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டார்.
- முள்சாட்டையாலும், தடிகளாலும் அடிக்கப்பட்டார்.
- காயங்களில் மிளகு வத்தல் பொடி அல்லது சாந்து தேய்க்கப்பட்டது.
- ஏழு மாதங்கள் திறந்த வெளியில் மரத்தில் கட்டப்பட்டுக் கிடந்தார்.
- கைது செய்யப்பட்டது முதல் இறப்பு வரை நீராடவோ, குளிக்கவோ, முடி வெட்டிக்கொள்ளவோ, சவரம் செய்து கொள்ளவோ அனுமதிக்கப்-படவில்லை.
- பசிக்கும் தாகத்துக்கும் உட்படுத்தப்பட்டார்.
- மக்களின் கண்களில் படாதவாறு வெவ்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டு, இறுதியில் ஆரல்வாய்மொழி சிறையில் அடைக்கப்பட்டார்.

- அத்தனை துன்பங்களிடையேயும் தேவசகாயம் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். எந்த கோபமோ, எரிச்சலோ, சோகமோ அவரை ஆட்கொள்ளவில்லை.

- தம் பாடுகளில் தம் மனைவியையும் மறக்காமல் மூன்று நான்குமுறை வரச் சொல்லி சந்தித்தார்.

- ஏறக்குறைய மூன்றாண்டளவாக நீராட அனுமதிக்கப்படாமல் இருப்பினும் அவரது உடலிலிருந்து எந்த நாற்றமோ, நெடியோ வீசவில்லை.

இறுதியாக, ஆரல்வாய்மொழி காற்றாடிமலைக்குக் கொண்டு செல்லப்பட்டு 1752ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் தேதி நள்ளிரவில் 5 குண்டுகளுக்கு இரையாகி மறைசாட்சியாய் தன்னுயிரைத் தந்தார். அவரது உடல் காட்டு விலங்குகளுக்கு இரையாகப் போடப்பட்டது. ஐந்து நாட்களுக்குப்பின் அவ்வுடலின் எஞ்சிய பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அப்பொழுதே புகழ் பெற்றிருந்த கோட்டாறு புனித சவேரியார் ஆலயத்தில் (இன்று கோட்டாறு மறைமாவட்டப் பேராலயம்) நடுப் பீடத்திற்குமுன் மறைசாட்சியின் உடலின் எஞ்சிய பகுதிகள் அடக்கம் செய்யப்பட்டன.

அன்றுமுதல் இன்றுவரை :

மறைசாட்சியின் சாவு தொடக்க முதலே ஒரு மறைசாட்சியமாகவே மக்களால் பார்க்கப்பட்டு வந்துள்ளது. எனினும் திரு அவையின் அதிகாரப்பூர்வமான அறிவிப்புக்கான விண்ணப்பம் 2003-ஆம் ஆண்டில்தான் முறையாக தமிழகத் திருஅவையின் பரிந்துரையோடு அனுப்பப்பட்டது.

2012-ஆம் ஆண்டு மறைசாட்சி தேவசகாயம் மறைசாட்சியாக அறிவிக்கப்பட்டு அருளாளர் நிலை அடைந்தார். தொடர்ந்து நடந்த ஆய்வுகளில் நமது மறைசாட்சி தேவசகாயத்தின் பரிந்துரையால் அற்புத நிகழ்வு ஒன்று திருத்தந்தையால் 2020ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, வருகிற மே மாதம் 15ஆம் நாள், பாஸ்காவின் 5ஆம் ஞாயிற்றுக் கிழமையன்று வத்திக்கானில் திருத்தந்தையால் புனிதராக அறிவிக்கப்படும் இனிதான நிகழ்வு நடைபெற இருக்கின்றது.

புதுப்புனிதர் நமக்குத் தரும் செய்தி

தமிழகத் திரு அவையின் தவப்புதல்வன் மறைசாட்சி தேவசகாயத்தின் புனிதர் நிலை அறிவிப்பு நம்மையே நாம் புதுப்பித்துக்கொள்ள நமக்கென்று பிறந்திருக்கும் ஒரு வாய்ப்பு.

முதலாவது, நமது கத்தோலிக்கக் கிறித்தவ நம்பிக்கையில் நாம் ஆழமும் உறுதியும் கொள்வோம். இன்றைய சமூக, அரசியல் சூழலில் நமது நம்பிக்கை வாழ்வுக்கு எத்தனை எத்தனையோ சவால்கள் ஏற்பட்டுள்ளன. அவை அனைத்தையும் உறுதியுடன் ஏற்றுக்கொண்டு நம்பிக்கையினால் நாமும் நற்சான்றுகளாக மாற இயலும் (காண். எபிரே. 11:39).

இரண்டாவது, தமிழகத் திரு அவையில் இன்றும் நிலவும் தீமை சாதியின் அடிப்படையில் மக்கள் பிரிந்திருப்பதும், அந்தச் சாதி உணர்வுகளால் நடக்கும் குழப்பங்கள், ஏற்றத்தாழ்வுகள், கலவரங்கள் முதலிய தீமைகள். இச்சூழலில் "சமத்துவ நல்லறம் காட்டும் நம் இல்லறப் புனிதர்" தேவசகாயம் தரும் "சாதிகள் இல்லா சமத்துவம்" என்னும் செய்தி நம்மைத் தூண்டி எழுப்புகிறது: (கலா 3:27-28) என்ற இறைவார்த்தையின் இந்த அறைகூவல், புனித தேவசகாயம் தரும் இரண்டாவது முக்கியச் செய்தியாகும்.

மூன்றாவது, இணைந்து பயணிக்கும் திரு அவை என்னும் ஆயர் மாமன்றச் செய்தியும், இந்தப் பொதுநிலை, இல்லறப் புனிதர் நமக்கு விடுக்கும் ஓர் அழைப்பாகவே தெரிகிறது. யாரையும் விளிம்பு நிலையினர் என்று தள்ளிவிடாமலும், வாழ்வுநிலைகளில் படிமுறை ஏற்றத் தாழ்வுகளையும், வகுப்புவாத மனநிலையையும் போக்கி "இணைந்து பயணிக்க" இந்த இல்லறப் புனிதர் நம்மை அழைக்கிறார்.

தேசிய நன்றி விழா

நம் இல்லறப் புனிதர் மறைசாட்சி தேவசகாயத்தின் புனிதர்நிலை அறிவிப்பினை இந்தியத் திருஅவை வருகின்ற ஜுன் 5ஆம் நாள், தூய ஆவியின் திருநாள் அன்று கொண்டாடுகின்றது. நம் புனிதர் மறைசாட்சி மகுடம் பூண்ட காற்றாடிமலைப் பகுதியில் இது நடத்தப்படுவது தனிச் சிறப்பாகும்.

திருத்தந்தையின் இந்தியத் தூதுவர் மேதகு லெயோபோல்டோ ஜிரெல்லி தலைமையேற்க, இந்தியத் திருஅவையின் பல்வேறு தலைவர்களான கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருள்பணியாளர்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் திரளாகக் கலந்துக்கொள்ள இருக்கிறார்கள்.

பிற்பகல் 2.30 மணிக்கு கலை நிகழ்வுகளுடன் தொடங்கும் இக்கொண்டாட்டம் 5 மணிக்கு நடைபெறும் மாபெரும் ஆடம்பரத் திருப்பலியுடன் நிறைவு பெறும்.

கோட்டாறு மற்றும் குழித்துறை மறைமாவட்டங்கள் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்கின்றன. அவர்களுக்கு நம் இறைவேண்டலாலும், பொருள் உதவியாலும் நமது ஒத்துழைப்பை வழங்கலாம். ஆனால் மிக முக்கியமாக தமிழகமெங்குமிருந்தும் மக்கள் இந்திய நாடெங்குமிருந்து அங்குக் கூடிவரும் அனைவரோடும் இணைந்து, தமிழகத்தின் தவப்புதல்வன் மறைசாட்சி புனித தேவசகாயத்தை கொண்டாடுவோம். நிறை ஆசி பெறுவோம்.

இவண்
தமிழக ஆயர் பேரவை

தலைவர்
மேதகு பேராயர் ஜார்ஜ் அந்தோனிசாமி
சென்னை-மயிலை பேராயர்
செயலர்
மேதகு தாமஸ் பால்சாமி
திண்டுக்கல் மறைமாவட்ட ஆயர்
துணைத்தலைவர்
மேதகு இலாரன்ஸ் பயஸ்
தருமபுரி மறைமாவட்ட ஆயர்

குறிப்பு : இச்சுற்றுமடல் 2022 மே 8ஆம் தியதி தமிழகமெங்கும் உள்ள ஆலயங்களில் வாசிக்கப்பட வேண்டும்.

My hearty congratulation goes to all our priests and religious who are celebrating their Ordination day and Birth day in this month.

May the Risen Lord bless them abundantly and our Mother Mary intercedes for them.

Yours in Christ Jesus,


**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

**Administrator's Program :**

| | | | |
|---|---|---|---|
| 1 | Sun | | Feast Mass, Shenbakkam |
| 3 | Tue | | Golden Jubilee Mass Sr. Jayakodi, Madhavaram |
| 5 | Thu | | Blessing of New Chapel, Madha TV, Chennai |
| 8 | Sun | | Wedding Cathedral, Vellore |
| 12 | Thu | | Eucharistic Day Celebration, Thachambadi |
| 14 | Sat | | Eucharistic Day Celebration, Periya Kozhapalur |
| 15 | Sun | M | Silver & Golden Jubilee Celebration of Srs of St. Charles Borromeo, Tirupattur |
| | | E | Achirapakkam |
| 20 | Fri | | Feast Mass, 1st Holy com. & Confirmation, Melpudupakkam |
| 21 | Sat | | Golden Jubilee Celebration of the Convent, Elayankanni |
| 24 | Tue | | Feast Mass, Vaniyambadi |
| 25 | Wed | M | Silver Jubilee of Rev. Fr. N.T. Irudhayaraj, Uriurkuppam |
| | | E | Final Profession, Mrs. Clara's Daughter, Arni |
| 26 | Thu | | First Year Death Anniversary Mass, Mazhuvankarunai |
| 28 | Sat | | Thanksgiving Mass, Cathedral Vellore |
| 29 | Sun | | Feast Mass, Pallalakuppam |

**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

## *Hearty Congratulations*



# Most Rev. Dr. Francis Kalist DD.

**Installation : 29.04.2022**

**Archbishop of Pondicherry & Cuddalore**

**On behalf of all the Priests, Religious and Laity of the Diocese of Vellore**

**We Congratulate and wish God's Choicest Blessings**

**Diocesan Administrator**

## PROCURATOR'S OFFICE

### GOOD FRIDAY COLLECTION - 2022

| S.No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Kodayanchi | 3617 |
| 2 | Pallalakuppam | 7230 |
| 3 | Gengapattu | 16304 |
| 4 | Sathuvacharry | 16300 |
| 5 | Udayendiram | 15000 |
| 6 | Cathedral | 85180 |
| 7 | Old Town | 12500 |
| 8 | Gudiyatham | 22000 |
| 9 | Shenpakkam | 8000 |
| 10 | A.Kattupadi | 28474 |
| 11 | Pulavanbadi | 4550 |
| 12 | Narasingapuram | 6030 |
| 13 | Bagayam | 19950 |
| 14 | Koratampet | 8200 |
| 15 | Mazhuvankarunai | 14000 |
| 16 | Gandhinagar | 50220 |
| 17 | Vandavasi | 20000 |
| 18 | Alapakkam | 8101 |
| 19 | Thirupattur | 25330 |
| 20 | Sirungattur | 2600 |
| 21 | Thachambadi | 13220 |
| 22 | Pulivanandal | 2000 |
| 23 | Kasthambadi | 3000 |
| 24 | Arakkonam | 49260 |
| 25 | Vettavalam | 21500 |
| 26 | Thalayampallam | 2650 |
| 27 | St.Thomas Hospital,Chetpet | 7000 |
| 28 | Auxilium Home | 15000 |
| | **Total** | **487216** |

Thanks for all those who have alredy remitted the Good Friday Collection and May I request to give those who have not yet given.

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

## குடும்பநலப் பணிக்குழு

திருமணத் தயாரிப்பு வகுப்புகள்

அன்பு பங்குத்தந்தையர்களே!

உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்!

திருமணத் தயாரிப்பு வகுப்புகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து தங்கள் பங்கு இளையோர்களை தவறாமல் அனுப்பிவைப்பதற்காக உங்களை மனதார பாராட்டுகிறேன்.

தற்போது 80% பங்கைச் சார்ந்த இளையோர் திருமணத் தயாரிப்பு வகுப்பில் தவறாது பங்கு கொள்கின்றனர். இன்னும் இருக்கின்ற 20% பங்குகள் பங்கு கொண்டால் மிகவும் சிறப்பாக இருக்கும். எனவே பங்குத் தந்தையர்கள் தங்கள் பங்கு இளையோரை உற்சாகப்படுத்தி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மே மாதம்

07.05.2022 உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
21.05.2022 ஆயர் இல்லம், வேலூர்
நேரம் : காலை 9:00 முதல் மாலை 4:00 மணி வரை

ஜூன் மாதம்

04.06.2022 உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
18.06.2022 ஆயர் இல்லம், வேலூர்
நேரம் : காலை 9:00 முதல் மாலை 4:00 மணி வரை

குறிப்பு : முக கவசத்தோடு திருமண வகுப்பிற்கு வரவும்.

தொடர்புக்கு : பேரருட்பணி L.இரமேஷ் அந்தோணி - 98948 91490
திரு. சாமுவேல், வேதியர் - 90478 90703

அருட்பணி. முனைவர் L.இரமேஷ் அந்தோணி
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்.

# அவர் உயிரோடு இருக்கிறார்



சிலுவை நமது மீட்பின் சின்னம். தவகாலத்தில் இயேசுவின் பாடுகளை தனிப்பட்ட விதத்திலும் பங்கு சமூகமாகவும் சிலுவை பாதையை வாசித்து தியானிக்கின்றோம். நமது மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி நிலையத்தின் சார்பாக இந்த ஆண்டும் (தவக்காலம் - 2022) ஐந்து மையங்களில் இயேசுவின் பாஸ்கா நிகழ்வானது Passion Play of India என்ற அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்டது. இதில் தமிழகத்திலுள்ள பல ஊர்களிலிருந்தும் நமது வேலூர் மறைமாவட்டத்திலிருந்தும் 100-க்கும் மேற்பட்ட தன்னார்வ நடிகர்கள் இயேசுவின் பாடுகளை தத்துருபமாக நடித்துக் காட்டினார்கள் இந்த இயேசுவின் பாடுகளின் ஒலி ஒளி காட்சி கோவிட்-19 பிறகு மக்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து செபிப்பதற்கும் தங்கள் நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமைந்தது.

| நாள் | இடம் | பங்கு தந்தை | தலைமை | கலந்துக் கொண்டோர் |
|---|---|---|---|---|
| **18.03.2022** | வந்தவாசி | Rev. Fr. பன்னீர் செல்வம் | Rev. Fr. பன்னீர் செல்வம் | 2,500 |
| **25.03.2022** | குடியாத்தம் | Rev. Fr. அக்டேவியஸ் | Rev. Fr. அக்டேவியஸ் | 1,500 |
| **27.03.2022** | காந்தி நகர் | Rev. Fr. A.R.அந்தோனிசாமி | Msgr. ஐ. ஜான் ராபர்ட் | |
| | | | Rev. Fr. சுந்தர் | 2,500 |
| **01.04.2022** | ஓல்டு டவுன் | Rev. Fr. எட்வட் | Rev. Fr. சுந்தர் | 1,200 |
| **02.04.2022** | கோவிலூர் | Rev. Fr. Y.ஆரோக்கியசாமி | Rev. Fr. யோபு | 2,500 |

இந்நிகழ்வுகள் நடைபெற அனுமதி கொடுத்த நமது மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்பணி ஐ. ஜான் ராபர்ட் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை

தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்திய திருவாளர் வினித், தேசிய ஒருங்கிணைப்பாளர் Fashion play of India அவர்களுக்கும் இடமும், பொருள் உதவியும் வழங்கிய பங்கு தந்தையர்களுக்கும், பங்குப்பேரவை உறுப்பினர்களுக்கும் மற்றும் இந்நிகழ்வினை கண்டுகளித்த அனைத்து இறைமக்களுக்கும் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தோழமையோடு இணைவோம்! பங்கேற்போம்!!**
**இறையாட்சியை அறிவிப்போம்!!!**

கிறித்துவின் அன்பில்,

அருள்முனைவர் **எல். ரமேஷ் அந்தோணி**
இயக்குநர், மேய்ப்பு பணி நிலையம், வேலூர்

## உலக ஆயர்கள் மாமன்றம் - 2021 - 2023 மறைமாவட்ட நிறைவு விழா






நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நாம் அனைவரும் இணைந்து இறைநம்பிக்கையில் பயணிக்க உலக ஆயர்கள் மாமன்றத்தை துவக்கியுள்ளார். நமது மறைமாவட்டத்தில் குருக்கள், இருபால் துறவியர்கள், வேதியர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் கலந்துக்கொள்ள அக்டோபர்

28, 2021 அன்று தூய விண்ணேற்பு அன்னை பேராலயத்தில் ஆயர் மாமன்றத்தை மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு. ஐ. ஜான் ராபர்ட் தலைமையேற்று துவக்கி வைத்தார். ஆயர் மாமன்ற ஒருங்கிணைப்பாளர் பேரருட்திரு. ரமேஷ் அந்தோணி அவர்கள் அனைவரையும் வரவேற்று மாமன்ற இலட்சினையை காணொளியின் வழியாக அனைவருக்கும் தெளிவாக விளக்கினார்.

இரண்டாவது கட்டமாக ஆயர் மாமன்றத்தின் முக்கியத்துவத்தையும் கருப்பொருளையும் விளக்கி சொல்ல இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டன. முதல் குழுவில். பேரருட்பணி. மங்கள தாவீது, பேரருட்பணி. ஜெகதீஷ், பேரருட்பணி. ரமேஷ் அந்தோணி, அவர்களும் இரண்டாவது குழுவில் பேரருட்பணி. சுந்தர் ச.ச, பேரருட்பணி. பன்னீர்செல்வம் மற்றும் திருவாளர் பெலவேந்திரம் தலைமை ஆசிரியர் அவர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

மூன்றாவது கட்டமாக ஆயர் மாமன்றத்தில் மறைவட்ட குருக்கள், துறவியர், ஆசிரியர்கள், வேதியர்கள், மற்றும் அன்பியத் தலைவர்களுக்கு கருத்தரங்கு மற்றும் கருத்துப்பகிர்விற்கான அமர்வுகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன. அதன் பின்பு பங்கு அளவில் மக்களின் கருத்துகள் சேகரிக்க ஏழு கேள்விகள் கொண்ட வினாக்கள் பங்கு தந்தையர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டது. பங்கிலுள்ள அன்பியங்கள் மற்றும் குழுக்களின் கருத்தை அறிக்கையாக நமது மறைமாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி நிலையத்திற்கு 31 மார்ச் 2022க்குள் அனுப்பி வைக்குமாறு பங்கு தந்தையர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நான்காவது கட்டமாக ஆயர் மாமன்ற நிறைவு விழாவானது நமது மறைமாவட்டத்தில் சங்கமம் மண்டபத்தில் 30 ஏப்ரல் 2022 அன்று நடைபெற்றது. இதில் குருக்கள், துறவறத்தார், பணிக்குழுக்களின் செயலர்கள், பக்த சபைகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள் மற்றும் மறைவட்டங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர். அதன்படி இதில் 128 பேர் கலந்துக் கொண்டனர்.

நிகழ்ச்சிகள் காலை 10 மணிக்கு செப வழிபாட்டோடு தொடங்கின. அதனை தொடர்ந்து ஆயர் மாமன்ற ஒருங்கிணைப்பாளர் பேரருட்பணி முனைவர் L. இரமேஷ் அந்தோணி அவர்கள் அனைவரையும் வரவேற்று, ஆயர்

மாமன்றத்தின் சிறப்பம்சங்களை பற்றி விளக்கி பேசினார். பின்பு மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு Msgr. I. ஜான் ராபர்ட் அவர்கள் தலைமையேற்று ஆசியுரை வழங்கினார். ஆயர் மாமன்றத்தின் கருப்பொருளான தோழமை, பங்கேற்பு மற்றும் நற்செய்தி அறிவிப்பு இவற்றை திருமுழுக்கு பெற்றவர்கள் எப்படி தங்களின் வாழ்க்கையில் வெளிப்படுத்தமுடியும் என்பதை பேருரட்திரு. முனைவர் தே. அல்போன்ஸ், பேராசிரியர் கோட்டார் மறைமாவட்டம் அவர்கள் மிகவும் சிறப்பாக தெளிவுபடுத்தினார்கள். நண்பகல் 12 மணிக்கு பேரருட்திரு முனைவர் ஜெகதீஷ் அவர்கள் பொது விவாத மேடையை வழிநடத்தினார். பின்வரும் தலைப்புகளில் கருத்துக்கள் பகிர்ந்துக்கொள்ளப்பட்டன.

| எண் | தலைப்பு | கருத்துரையாளர் |
|---|---|---|
| 1 | நற்செய்திப் பணியில் பொதுநிலையினரின் ஈடுபாடும் ஒத்துழைப்பும் | வேதியர் சாமுவேல் |
| 2 | பங்குத் தளத்திலும் மறைமாவட்டத்திலும் துறவறத்தாரின் பணியும் வாழ்வும் | அருட்சகோதரி. மார்கிரேட் FMA |
| 3 | சமூகப்பணியும் திருஅவையின் பங்கேற்பும் | திரு. பேட்ரிக், VSSS |
| 4 | குருக்களுக்கிடையோன கூட்டுவுறவும் நற்செய்திப் பணியும் | அருட்பணி. ஜெயபிரகாசம் |

மதிய உணவிற்குப்பின் பிற்பகல் 2 மணிக்கு பேரருட்திரு முனைவர் மங்கள தாவீது அவர்கள் பொது கருத்து பகிர்விற்கு அனைவரையும் அழைத்துச் சென்றார். இப்பகிர்வில் பங்கேற்பாளர்கள் அனைவரும் கலந்துக்கொண்டு தங்கள் கேள்விகளையும், கருத்துக்களையும் பகிர்ந்துக்கொண்டார்கள். கேள்விகளுக்கான தெளிவினை மேடையில் இருந்த ஆயர் மாமன்ற ஒருங்கிணைப்பு குழுவினர் அளித்தார்கள். இறுதியாக 3.30 மணியளவில் பேருட்திரு Msgr. I. ஜான் ராபர்ட் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறைமாவட்ட அளவிலான ஆயர் மாமன்ற நிகழ்வுகளை நிறைவு செய்தார்கள். இந்நிகழ்வுகளுக்கு உழைத்த அனைவருக்கும் தலைமை ஆசிரியர் திருவாளர் பெலவேந்திரம் அவர்கள் நன்றி தெரிவித்தார். இவ்வாறு மறைமாவட்ட அளவிலான உலக ஆயர்கள் மாமன்றம் 2021-2023 வேலூர் மறைமாவட்டத்தில் மிகச் சிறப்பாக நிறைவு பெற்றது. இந்த ஆயர் மாமன்ற செயல்பாடுகளை ஒருங்கிணைக்க என்னை நியமித்த வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு Msgr. I. ஜான் ராபர்ட் அவர்களுக்கும், ஒருங்கிணைப்பில் உடனிருந்த ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் பேரருட்திரு. சுந்தர் ச.ச. பேரருட்திரு மங்கள தாவீது, பேரருட்திரு. ஜெகதீஷ், பேரருட்திரு பன்னீர் செல்வம், உயர்திரு பெலவேந்திரம் மற்றும் பேரருட்திரு தங்கராஜ்

ஆலோசனை தந்தையர்களுக்கும், அனைத்து மறைவட்ட முதன்மை குருக்களுக்கும், ஆயர் இல்லத் தந்தையர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**தோழமையோடு இணைவோம்! பங்கேற்போம்!! இறையாட்சியை அறிவிப்போம்!!!**

கிறிஸ்துவின் அன்பில்,

அருள்முனைவர் **எல். ரமேஷ் அந்தோணி**
ஆயர் மாமன்ற ஒருங்கிணைப்பாளர் - வேலூர் மறைமாவட்டம்

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

**20.04.2022 :** அன்று மேல்புதுப்பாக்கம் ஆலய வளாகத்தில் கோல்பிங், டாசோஸ் இயக்கத்தின் ஒருநாள் கருத்தரங்கு இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்தரங்கிற்கு வேலூர் சமூக சேவை சங்க இயக்குநர் பேரருட்திரு S. ஜேம்ஸ் அவர்கள் தலைமை தாங்கி, கோல்பிங் இயக்கத்தின் வருமானம் பெருக்கும் திட்டம், சமூக காடுகள் பாதுகாப்பு, மரம் நடுதல் போன்றவற்றில் நம் திறன் வளர்ப்பு பற்றி விளக்கி கூறினார்கள். VSSS திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் அவர்கள் அரசு நலத்திட்டங்கள், வங்கி திட்டங்கள் வழியாக நாம் நம் திறன்களை வெளிக்கொணர்ந்து வாழ்வாதார வளர்ச்சிக்கு பயன்படுத்துவது குறித்து விளக்கம் அளித்தார்கள்.

VSSS பணியாளர்கள் திரு. A. லூயிஸ், திரு. S. சவரிநாதன், திருமதி. P.S. செலின் இவர்களின் மேற்பார்வையில் உள்ளூர் வளங்கள் வழியாக திறன் வளர்ப்பது பற்றி வரைபடம் வரைதல் பயிற்சி நடத்தப்பட்டு, மதிப்பீடும் செய்யப்பட்டது. இக்கருத்தரங்கில் 60 உறுப்பினர்கள் பங்கேற்றனர். நிறைவாக திரு. யேசுகுமார் நன்றி கூற இயக்குநர் ஆசியுடன் கருத்தரங்கு நிறைவுப்பெற்றது. இதில் சமூகவியல் மாணவர்கள் திரு. ராஜேந்திரன், திரு. கிருஷ்ணகாந்த் கலந்துக்கொண்டு சிறப்பு களப்பயிற்சி பெற்றார்கள்.

## HUNGER & DECEASE COLLECTION - 2022

| S.No. | PARISHES | AMOUNT |
|---|---|---|
| 1 | Kodayanchi | 1,273 |
| 2 | Pallalakuppam | 4,150 |
| 3 | Gengapattu | 6,255 |
| 4 | Sathuvachary | 8,100 |
| 5 | Vellore Cathedral | 42,800 |
| 6 | Udayendiram | 5,000 |
| 7 | Old Town | 12,500 |
| 8 | Gudiyatham | 3,000 |
| 9 | Shenpakkam | 4,000 |
| 10 | Pulavanpadi | 1,600 |
| 11 | A. Kattupadi | 9,595 |
| 12 | Narasingapuram | 5,600 |
| 13 | Bagayam | 32,800 |
| 14 | Kortampet | 4,100 |
| 15 | Mazhuvankarunai | 4,000 |
| 16 | Alapakkam | 4,704 |
| 17 | Gandhi Nagar | 27,680 |
| 18 | Vandavasi | 10,000 |
| 19 | Sirunkattur | 2,900 |
| 20 | Thirupathur | 5,500 |
| 21 | Thachampadi | 25,204 |
| 22 | Pulivanandal | 1,500 |
| 23 | Kasthampadi | 2,000 |
| 24 | Arakonam | 14,879 |
| 25 | Vettavalam | 2,500 |
| 26 | Thalayampallam | 1,840 |

<u>குறிப்பு</u>

- பசிப்பிணி போக்கும் திட்டத்திற்கு பங்கு தந்தையர்களும், இறைமக்களும் தாராளமாக நிதி வழங்கியமைக்கு நன்றியும் செபமும்.

- பசிப்பிணி நிதி வழங்காத பங்குகள் VSSS அலுவலகத்தில் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செய்தி தொகுப்பு
திரு. **A.**பேட்ரிக் &
திரு. **T.**இன்பசேகர்
**VSSS & TVMSSS** திட்டமேலாளர்கள்

பேரருட்திரு. **S.**ஜேம்ஸ், **MSW**
இயக்குநர், **VSSS & TVMSSS**
ஆயர் இல்லம், வேலூர்

## புனித வின்சென்ட் தே பவுல்

மத்தியசபை பொறுப்பாளர்கள் கூட்டம்

03.04.2022 அன்று தக்கலை கல்குறிச்சி சங்கமம் தியான இல்லத்தில் தமிழக மண்டலசபை சார்பில் மத்திய சபை பொறுப்பாளர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. இதில் வேலூர் மத்தியசபைத் தலைவர் சகோ. ம.சார்லஸ் ஆரோக்கியராஜ், பொருளாளர் ஜெயபால் மற்றும் சகோதரர் மரிய அந்தோணி ஜான்சன் (போளூர்) ஆகியோர் கலந்து கொண்டனர். சபை நெறிமுறைகள், மத்திய சபைகள் (ஆடிட்) தணிக்கையின்போது சுட்டிக்காட்டிய குறைகளை தவிர்க்க ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

சபையில் கடந்த 20 முதல் 25 ஆண்டுகளாக உழைத்துவரும் மகளிர் சபை பிரதிநிதிகளுக்கு சான்றுகள் வழங்கப்பட்டன. மேலும் ஆகஸ்டு மாதம் சபைக்கையேட்டை மையப்படுத்தி நடத்தப்பட்ட வினாடி – வினாவில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றுகளும் இதில் முதல் 3 இடங்களை பிடித்தவர்களுக்கு பரிசும் வழங்கப்பட்டன. பின்னர் மாலை 5.00 மணியளவில் இக்கூட்டம் முடிவுற்றது.

17.04.2022 தூய விண்ணேற்பு அன்னை கிளைச்சபை, வேலூர்

தூய விண்ணேற்பு அன்னை கிளைச்சபை சார்பில் மூன்று குடும்பங்களுக்கு தேவையான உணவு பொருள்கள் கிளைச்சபைத் தலைவர் ராஜன், சில்வஸ்டர், அந்தோணிராஜ் ஆகியோரின் தலைமையில் வழங்கப்பட்டன.

18.04.2022 வான்ருட்டின் இல்லம்

விருதம்பட்டு டாக்டர் வான்ருட்டின் இல்லத்தில் விருதம்பட்டு கவுன்சிலர் நித்தியகுமார் அவர்களை சந்தித்து அங்கு செய்ய வேண்டிய பணிகள் பற்றி சொல்லப்பட்டன. அதன்படி, தெரு விளக்குகள் அமைக்கப்பட்டது. வீட்டு வரி வழங்கிடவும். ஆக்கிரமிப்பில் உள்ளதை அகற்றிடவும்,

சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மத்தியசபைத் தலைவர். ம.சார்லஸ் ஆரோக்கியராஜ், மூத்த துணைத் தலைவர் அ.தோம்னிக், சகோ. ஜெயசீலன், திருமதி. வேளாங்கண்ணி ஆகியோர் உடன் இருந்தனர்.

பேரருள்திரு. **ஜெ.ஜெயபிரகாசம்** இயக்குநர், பக்த சபைகள்

**ம.சார்லஸ் ஆரோக்கியராஜ்** தலைவர், வேலூர் மத்திய சபை

## மரியாயின் சேனை

24.4.2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆயர் இல்ல வளாகம். ஜூபிலி அரங்கத்தில் நடைபெற்ற மரியாயின் சேனை, பிரசிடிய கியூரியா அலுவலர்கள், கொமித்சிய கூட்டத்தில் மொத்தம் 35 நபர்கள் பங்கேற்றனர். இதில், வேட்டவலம், வந்தவாசி, சேத்துப்பட்டு, ராணிப்பேட்டை, காட்பாடி நிர்வாக அலுவலர்களும், பிரசிடியம், விண்ணேற்பு அன்னை பேராலயம் காந்திநகர், சேண்பாக்கம், ஓல்டுடவுன், அரியூர் ஆகிய இடங்களிலிருந்து வருகைபுரிந்தனர். இதில் முக்கிய கருத்தாக சேனையில் தற்போது ஏற்பட்டுள்ள தொய்வு மற்றும் அதன் வளர்ச்சிக்கான கருத்துக்கள் பரிமாறப்பட்டது.

மேல் நிர்வாக சபை சென்னை ரீஜியாவின் பொறுப்பாளர்கள் இருவர் பார்வையிட வந்தனர். கொமித்சிய செயல்பாடுகளை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். மரியாயின் சேனை நூற்றாண்டினை ஒட்டி, கொன்சீலியத் தலைவி மேரி மர்ஃபி அவர்களின் வேண்டுகோளை ஏற்று நமது திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் தமக்குள்ள அப்போஸ்தலிக்க அதிகாரத்தின் கீழ், இந்த சேனை நூற்றாண்டின் பொழுது மரியாயின் சேனையாளருக்குச் சிறப்பான பரிபூரண பலன் வழங்கலாமென கருணையுடனும் மனப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளார் என்று ஒப்புதல் பெற்ற கடிதம் வாசித்துக் காட்டினார். மேலும் வழக்கமான நிபந்தனைகளாக ஒப்புரவு அருட்சாதனம் பெற்று, திவ்விய நற்கருணை உட்கொண்டு திருத்தந்தையின் கருத்துக்களாக ஜெபித்து இப்பரிபூரண பலனைப் பெறலாம். செப். 7ம் தேதி 2021 முதல் செப்டம்பர் 7ம் தேதி 2022 வரை சேனையார் இப்பரிபூரண பலனைப் பெறலாம் என்றும் கடிதத்தில் கூறியுள்ளதை கூறினார்.

கொமித்சியத் தலைவி சகோ. இரத்னாமேரி கூறுகையில் சேனைப் பணிகள் பெருமளவில் தொய்வு ஏற்பட்டதை நாம் அறிவோம். தற்போதைய சூழலில் நாம் மிகுந்த தாழ்ச்சியோடும், தியாக மனப்பான்மையுடனும் செயல்பட்டு, விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வோம், திட்டமிட்டு புதிய பிரசிடியங்கள் உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவோம்.

பக்தசபை இயக்குநர் பேரருட்தந்தை ஜெயபிரகாசம் அடிகளார் தம் மறையுரையில் இறை இரக்கத்தின் ஞாயிரை நாம் சிறப்பிக்கும் இந்த நாளில் உயிர்த்த இயேசுவின் அருளாசீர் வழங்கி அன்றைய நற்செய்தியான தோமாவைப் பற்றி கூறி அவர் எவ்வாறு ஆண்டவர் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு “நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள்” என்று கூறினாரோ அதுபோல சேனையார் ஆண்டவர் மீது ஆழ்ந்த விசுவாசம் கொண்டு, தாம் செய்யும் பணியை அன்னை மரியாயின் பிள்ளைகளாக வாழ முயற்சி எடுக்க அழைப்பு விடுத்தார்.

நன்றி, மரியே வாழ்க.

சகோதரி **இரத்னா மேரி**

கொமித்சியத் தலைவி

## Sacred Heart Mat. Hr. Sec.School, Arakonam

## Golden Jubilee Annual Day





Sacred Heart Matric. Hr. Sec. School, Arakkonam celebrated its **GOLDEN JUBILEE Annual Day** on April 30, 2022 in a grand manner.

**Very Rev. Fr. S.M.Anandaraj,** the Correspondent of the school organised the function. **Rev. Fr. I. Jeevagan,** Director welcomed all the Dignitaries and the Parents.

**Very Rev. Msgr. I. John Robert**, Diocesan Administrator, Vellore was the Chief Guest of the day and presided over the function. In his address, he spoke about the history and the glorious days of the school. He gratefully remembered all the Priests whose hard work and dedication made this institution a great centre for Learning. He

also thanked the Teaching and Non-Teaching staff for their selfless service and encouraged everyone to continue their good work.

**Very Rev. Fr. S. Clement Rosario**, Manager of RCM Schools, Vellore was the Guest of Honor. In his speech, he thanked all the Correspondents who worked tirelessly for many years in Sacred Heart School Mat.Hr.Sec. School. He advised the students to have faith in God and in oneself moreover motivated them to work hard to become successful in life.

During the function 10th & 12th std School Toppers were honored with Prizes. General Proficiency Prizes were given to students from LKG to 12th std.

Students, Parents and well-wishers participated in the Cultural events and made the event joyful one.

**Mrs. Rita Pushpalatha,** Pricipal of Sacred Heart Mat. Hr. Sec. School presented the Annual Report and **Mrs. Stella Joseph,** Vice Principal proposed the vote of thanks.

**Rev. Fr. S.M.Anandaraj**
Correspondent
Sacred Heart Mat. Hr. Sec. School, Arakonam

## பொதுநிலையினர் பணிக்குழு

### MBBS / BDS மருத்துவப்படிப்புக்கு NEET தேர்வு

தமிழக அரசு சட்டசபையில் நிறைவேற்றி நீட் விலக்கு மசோதா இவ்வருடம் ஜனாதிபதி ஒப்புதல் பெற வாய்ப்பு இல்லை. ஆகவே தமிழக மாணவர்கள் MBBS (மெடிக்கல்) BDS (பல்) மருத்துவப் படிப்புகளுக்கு NEET தேர்வில் வெற்றிபெற வேண்டும்.

1. நீட் தேர்வு நாள் : 17 ஆகஸ்டு 2022

2. கல்வித் தகுதி : 12 ஆம் வகுப்பு முடித்தவர் மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதப் போகிறவர்களும் விண்ணப்பிக்கலாம்.

3. விண்ணப்பம் : ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

தேவைப்படும் ஆவணங்கள், தேர்வு கட்டணம், தேர்வுக்ககான பாடங்கள் அனைத்தும் இணையதளத்தில் உள்ளது. தேர்வு கட்டணம் கிரெடிட் அல்லது டெபிட் கார்டு வழி அனுப்ப வேண்டும். ஆன்லைன் வழியாகவே நீட் அட்மிட் கார்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

www.neet.nta.nic.in

4. தேர்வு : உயிரியல் (Biology), இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry) ஆகிய பாடங்களிலிருந்து 200 கேள்விகள் கேட்கப்படும். ஒரு கேள்விக்கு 4 மதிப்பெண் என்ற வகையில் 180 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். மொத்த மதிப்பெண்கள் (720 (180 x 4 = 720) ஆகும். இத்தேர்வை நடத்துகிறது. தேர்வு நேரம் 180 நிமிடங்களில் 180 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். இத்தேர்வு தமிழ் உட்பட 11 மொழிகளில் நடத்தப்படுகிறது. எழுத்து தேர்வாக தேர்வர்கள் 3 மணி நேரம் 20 நிமிடம் எழுத வேண்டும்.

5. பாடங்கள் கேள்விகள்

உயிரியல் 38 பாடங்கள் 90 கேள்விகள் – (Biology)

வேதியியல் 30 பாடங்கள் 45 கேள்விகள் – (Chemistry)

இயற்பியல் 19 பாடங்கள் 45 கேள்விகள் – (Physics)

உயிரியலில் 38 பாடங்களில் இருந்து 90 கேள்விகள் கேட்கப்படும். தோராயமாக ஒவ்வொரு தலைப்பிலும் ஒன்றிலிருந்து மூன்று கேள்விகள் கேட்க வாய்ப்புள்ளது.

வேதியியல் 30 பாடங்களில் இருந்து 45 கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு தலைப்பிலும் ஒன்றிலிருந்து இரண்டு கேள்விகள் கேட்க வாய்ப்புள்ளது.

இயற்பியல் 19 பாடங்களில் 45 கேள்விகள் கேட்கப்படும். தோராயமாக ஒவ்வொரு தலைப்பிலும் ஒன்றிலிருந்து இரண்டு கேள்விகள் கேட்க வாய்ப்புள்ளது

6. நீட் தேர்வில் வெற்றி பெற வழிமுறைகள்

- 40 நாட்களுக்குத் தேவையான செயல்திட்ட அட்டவணை நீங்களே உருவாக்க வேண்டும்.
- 87 பாடங்களுக்கான சிறுகுறிப்புகளை பாடங்களை படிக்கும்போதே தயாரிக்க வேண்டும்.

- 87 தலைப்புகளிலும் கட்டாயம் ஒரு தேர்வு எடுத்துக்கொள்ள வேண்டும்.
- 5 நீட் மாதிரி தேர்வுகள் கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஓஎம்ஆர் தாளை பயன்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும்.
- தேர்வை எதிர்கொள்வதற்கு முன்னால் நீங்கள் எடுத்த சிறு குறிப்புகளை ஒரு முறை மீண்டும் திருப்பி பார்த்து உங்கள் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
- ஒரு கேள்வியை ஒரு நிமிடத்திற்குள் முடிக்க பழக வேண்டும்.
- தவறான கேள்விகளை இனம்கண்டு மதிப்பெண் இழப்பை தவிர்க்க வேண்டும்.
- 11 மற்றும் 12 வகுப்பில் படித்த இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடத்திட்டத்தையும்; பயின்று வந்தால் சிபிஎஸ்இ புத்தகங்களை பயன்படுத்தாமல் மாநிலப் பாடத்திட்டத்தின் மூலமே நீட் தேர்வில் வெற்றி காண முடியும்.

7. சேர்க்கை **(Admission)**

இந்தியாவில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மொத்த MBBS இடங்கள்: 92,000, BDS இடங்கள் : 27,000. தமிழகத்தில் தான் அதிக இடங்கள் உள்ளன. தமிழகத்தில் மொத்த MBBS இடங்கள்: 8000 BDS இடங்கள் : 2870.

பொதுப்பிரிவு மாணவர்கள் மொத்தமுள்ள 720 மதிப்பெண்களில் 50மூ மேல் எடுக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட மற்றும்; SC/ST/BC மாணவர்கள் 40மூ எடுத்தால் வெற்றி பெறலாம். நம்பிக்கையுடன் உழைத்தால் ஏழை மாணவர்களும் வெற்றி பெறமுடியும். சாதியின் அடிப்படையில் (SC/ST/BC/MBC) ஒதுக்கீடு; உண்டு மருத்துவக் கல்லூரி சேர்க்கையில் அரசுப்பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 7.05% விழுக்காடு உள்ஒதுக்கீடு உள்ளது. அதில் 450 மாணவர்க்கு மேல் இடம் கிடைக்க வாய்ப்புண்டு. கிறித்தவ மாணவர்களும் நீட் தேர்வில் வெற்றி பெற்று சிறந்த மருத்துவராக வாழ்த்துகிறோம்.

அருள்பணி. **பூபதி லூர்துசாமி**
செயலர்,
தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு - 600 028.

## Birthday

| | | |
|---|---|---|
| 1 | Fr. M. Packiasamy | 01-05-1941 |
| 2 | Fr. P.Sugam Nayagam | 02-05-1982 |
| 3 | Fr. A.Octavius | 03-05-1951 |
| 4 | Fr. T.Johnny Edakkara | 05-05-1952 |
| 5 | Fr. P. J.Xavier | 06-05-1928 |
| 6 | Fr. T. Ignasi | 07-05-1954 |
| 7 | Fr. M.Rajan | 10-05-1982 |
| 8 | Fr. L.John Stephan | 25-05-1968 |
| 9 | Fr. S.A.Gnanasekar | 25-05-1982 |
| 10 | Fr. A.Nambikairaj | 26-05-1935 |
| 11 | Fr. Y.Sathishraj Yesu | 27-05-1983 |
| 12 | Fr. A.Pancras | 29-05-1956 |
| 13 | Rev. Msgr. I.John Robert | 29-05-1963 |
| 14 | Fr. A.Sunderraj | 29-05-1974 |
| 15 | Fr. R.Sigamani | 30-05-1986 |

## Ordination Day

| | | |
|---|---|---|
| 1 | Fr. S.Lazar Savarimuthu | 01-05-1979 |
| 2 | Fr. A.Kulandesu | 01-05-1987 |
| 3 | Fr. M.Abraham | 02-05-1986 |
| 4 | Fr. M.Amalanathan | 02-05-2004 |
| 5 | Fr. Y.Arockiasamy | 03-05-1987 |
| 6 | Rev Msgr. I.John Robert | 03-05-1989 |
| 7 | Fr. A.Roy Lazar | 04-05-1987 |
| 8 | Fr. A.Lourdu Xavier | 04-05-2000 |
| 9 | Fr. A.Anthony | 04-05-2000 |
| 10 | Fr. S.John Bosco | 05-05-1977 |
| 11 | Fr. P.Albin Justus | 05-05-1982 |
| 12 | Fr. D.Panneerselvam | 05-05-1988 |
| 13 | Fr. A.Arockiasamy | 05-05-2003 |
| 14 | Fr. P.Maran | 05-05-2011 |
| 15 | Fr I.Valanarasu | 05-05-2011 |
| 16 | Fr M.Devanesan | 05-05-2011 |

| | | |
|---|---|---|
| 17 | Fr A.Devasagayam | 05-05-2011 |
| 18 | Fr M.Yesu Dass | 05-05-2011 |
| 19 | Fr T.Prem Kumar | 05-05-2011 |
| 20 | Fr B.Yesu Prabhu | 06-05-2011 |
| 21 | Fr. M.Irudayasamy | 08-05-2000 |
| 22 | Fr. M.Martin | 09-05-1984 |
| 23 | Fr. M.Thangaraj | 09-05-2003 |
| 24 | Fr. S.Jose Enchackal | 10-05-1979 |
| 25 | Fr. V.Kuriakose Kariakatt | 10-05-1982 |
| 26 | Fr. M.Backia Raj | 10-05-2014 |
| 27 | Fr. R.Anthony Samy | 13-05-1983 |
| 28 | Fr. A.Sunderraj | 13-05-2003 |
| 29 | Fr. I.Arokiasamy | 14-05-1986 |
| 30 | Fr. D. Martin Santhakumar | 14-05-2004 |
| 31 | Fr. T. Ignasi | 15-05-1984 |
| 32 | Fr. S.Antony Buddhan | 15-05-1984 |
| 33 | Fr. C.Dayalaraj | 16-05-1991 |
| 34 | Fr. S.Malaiyappan | 17-05-1993 |
| 35 | Fr. A.John Baptist | 17-05-1993 |
| 36 | Fr.A.C.Savarimuthu | 20-05-1976 |
| 37 | Fr. S.Ratchaganathan | 20-05-1994 |
| 38 | Fr. S.Sagayanathan | 22-05-2003 |
| 39 | Fr.T.Johnny Edakkara | 24-05-1978 |
| 40 | Fr. J.Jayaprakasam | 24-05-1983 |
| 41 | Fr. S.Clement Rosario | 25-05-1993 |
| 42 | Fr. R.James Vincent | 26-05-1983 |
| 43 | Fr. Mangaladavid | 26-05-1999 |
| 44 | Fr. J.Irudayaraj | 28-05-1992 |
| 45 | Msgr. M.Joe Lourdusamy | 29-05-1982 |

## Intention

We pray for all young people, called to live life to the fullest; may they see in Mary's life the way to listen, the depth of discernment, the courage that faith generates, and the dedication to service.

- Pope Francis

## Calendar

| | | |
|---|---|---|
| 1 | Sun | Third Sunday of Easter |
| 2 | Mon | Athanasius, B & D, Memorial |
| 3 | Tue | Philip & James, Ap, Feast |
| 8 | Sun | Fourth Sunday of Easter |
| 13 | Fri | Our Lady of Fatima, Feast |
| 14 | Sat | Matthias, Ap, Feast |
| 15 | Sun | Fifth Sunday of Easter |
| 22 | Sun | Sixth Sunday of Easter |
| 26 | Thus | Philip Neri, P, Memorial |
| 29 | Sun | Ascension of the Lord, Solemnity |
| 31 | Tue | Visitation, Feast |

## Necrology

| | | |
|---|---|---|
| 1. | Rev. Fr. P. S. Andreas Patthi | 03.05.1997 |
| 2. | Rev. Fr. Hugh Tuene SDB | 05.05.1996 |
| 3. | Rev. Fr. Francis Philip SDB | 12.05.1950 |
| 4. | Rev. Fr. Orpheus Mentovani SDB | 19.05.1967 |
| 5. | Rev. Fr. V. F. Xavier | 24.05.1992 |
| 6. | Rev. Fr. A. Maria Michael | 25.05.2017 |
| 7. | Rev. Fr. C. Edambadam | 27.05.1995 |
| 8. | Rev. Fr. A. T. Thomas | 28.05.1998 |
| 9. | Rev. Fr. Henry Kallmeier SDB | 30.05.1930 |
| 10. | Rev. Fr. T. Ignatius | 31.05.1990 |

## RIP

1. In your Charity kindly pray for the repose of the soul of Mrs. Balamma Kasi (88) beloved mother of Rev. Fr. Kasi Rayappa, died on 18.4.2022.